**சாதாரணக்கூட்டம்**

**2024–ம்** ஆண்டு, பிப்ரவரி மாதம் **28 –ம்** தேதி புதன்கிழமை காலை **11.00** மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொருள் எண்.1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் பிப்ரவரி–**2024** ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.**1554/2014/**சி**1**

**தீர்மான எண்.24 நாள். 28.02.2024**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

பள்ளிபாளையம் நகராட்சியில் பிப்ரவரி மாதம் **23** –ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண் | வரியின் விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 4.96 | 210.06 | 0.33 | 166.21 | 4.63 | 43.86 |
| 2. | காலியிட வரி | 3.41 | 4.39 | 3.41 | 4.39 | 0.00 | 0.00 |
| 3. | தொழில்வரி | 19.91 | 18.63 | 19.65 | 16.29 | 0.27 | 2.35 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 2.57 | 70.83 | 1.51 | 61.27 | 1.06 | 9.56 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 19.64 | 0.00 | 18.51 | 0.00 | 1.13 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.23 | 48.60 | 0.03 | 40.25 | 0.20 | 8.34 |
| | **மொத்தம்** | **31.08** | **372.15** | **24.93** | **306.92** | **6.16** | **65.24** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.**1523/2013/**சி**1**

**தீர்மான எண். 25 நாள். 28.02.2024**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகள் இரண்டாண்டு சாதனைகளை கீழ்கண்ட நாளிதழ்களில் பொங்கல் மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட விபரப்படி விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழில்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலைமலர் (மலர் பப்ளிகேஷன்ஸ் லிமிடேட்) | **14.01.2024** | **9900.00** |
| 2 | காலைக்கதிர் (மகாலட்சுமி மீடியா பிரைவேட் லிமிடேட்) | **15.01.2024** | **10500.00** |
| 3 | கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் (தினகரன்) | **15.01.2024** | **8541.00** |
| 4 | தினமலர் | **15.01.2024** | **15649.00** |
| | | **மொத்தம்** | **44590.00** |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்டவாறு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு பொதுநிதியில் இருந்து தொகை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**1980/2023/இ1**

**தீர்மான எண். 26 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.4

அரசாணை எண் 760 பொது(முதல்வரின் முகவரி) துறை, நாள்.14.12.2023, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2021/ நாள்.15.12.2023 சுற்றறிக்கை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் செயல்முறை ந.க.எண்.69854/2023G4 நாள். 12.2023ன்படி, அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான முகாம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மூன்று கட்டங்களாக (19.12.2023, 22.12.2023 மற்றும் 29.12.2023) முகாம் நடைபெறும் மூன்று இடங்களில், பொதுமக்களுக்கு தேவையான இருக்கை வசதிகள், சாமியான பந்தல், ஒலி அமைப்பு, மற்றும் தண்ணீர் வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பணிக்கு 15.12.2023ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. (Exc GST) |
|---|---|---|
| 1 | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | ரூ. 2,05,000/– |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | ரூ. 2,13,113/– |
| 3 | ஜிஎஸ்சி டெக்னாலஜி,<br>39டி, ஆர்.பி காம்பளக்ஸ்,<br>பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம் – 638 183. | ரூ. 2,10,059 /– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே.எஸ்.மாரியப்பன், பவானி அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1998/2023/இ1

தீர்மான எண். 27 நாள். 28.02.2024

அங்கீகரிக்கப்பட்டது

பொருள் எண்.5

அரசாணை எண் 760 பொது(முதல்வரின் முகவரி) துறை, நாள்.14.12.2023, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2021/ நாள்.15.12.2023 சுற்றறிக்கை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் செயல்முறை ந.க.எண்.69854/2023G4 நாள். 12.2023ன்படி, அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான முகாம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மூன்று கட்டங்களாக (19.12.2023, 22.12.2023 மற்றும் 29.12.2023) முகாம் நடைபெறும் மூன்று இடங்களில், முகாமில் கலந்து கொள்ளும் அரசுத் துறை நிறுவனங்களுக்கான கணினிகள், அதற்கான பிரிண்டர்கள் மற்றும் வலைதள (Internet Facilities) வசதிகள் செய்யும் பணிக்கு 15.12.2023ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஜி எஸ் சி டெக்னாலஜி,<br>39டி, ஆர்.பி காம்பளக்ஸ்,<br>பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம் – 638 183. | ரூ. 4,39,524/– |
| 2 | பெருனைல் சிஸ்டம்ஸ்,<br>டிஸ்டிரிபூயுட்டர்ஸ்,<br>2/15, விநாயகர் கோவில் தெரு, சுவர்ணபுரி,<br>சேலம்–636 004. | ரூ. 4,70,796/– |
| 3 | இன்டர்பேஸ் டெக்னாலஜி,<br>7, சரவணபவன் காம்பளஸ் முதல் தளம்,<br>மேட்டு தெரு, ஈஸ்வரன் கோவில் அருகில், சேலம். | ரூ. 4,75,196 /– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஜி எஸ் சி டெக்னாலஜி, கொமரபாளையம் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.**1998/2023/இ1**

**தீர்மான எண். 28 நாள். 28.02.2024**

அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.6**

பள்ளிபாளையம் நகராட்சி, நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் ஏற்கனவே உள்ள மின்இணைப்பிற்கு மின்திறன் அதிகம் தேவையுள்ளதால் தற்போதுள்ள ஒரு முனை மின்இணைப்பினை மும்முனை மின்இணைப்பாக மாற்றித்தரும்படி தலைமை ஆசிரியர், கேட்டுள்ளதற்கிணங்க, மின்இணைப்பு எண்.**04–160–002–753**ன் இணைப்பினை மும்முனை இணைப்பாக மாற்றுவதற்கு ஆகும் செலவினம் ரூ. **14000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.**160/2024/**இ1

**தீர்மான எண். 29 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.7**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **10** நேரு நகர் பெரும்பாறை காடு பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் 7.50 HP மின்மோட்டார் இறக்குதல் மற்றும் **11**வது வார்டு முனியப்பன் நகர் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் 5 HP மின்மோட்டார் இறக்குதல் மற்றும் **21**வது வார்டு காமராஜர் நகர் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் 7.50 HP மின்மோட்டார்களில் புதியதாக மின்மோட்டார் இறக்கி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு புதிய மும்முனை இணைப்பு பெறுவதற்கு ஆகும் செலவினம் ரூ.**65,000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**196/2024/**இ1

**தீர்மான எண். 30 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.8**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–24 ஆண்டின் கீழ், மாநிலங்களவை உறுப்பினர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பரிந்துரை செய்துள்ள பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.02.2024 – ம் தேதி செவ்வாய்கிழமை அன்று கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–24 முத்துமாரியம்மன் கோவில் வீதியில் தார்சாலை அமைத்தல் | 14,00,000/- | ஆர்.முத்துசாமி அன் கோ 1/56, பவானி ரோடு, பிரிவு , சேலம். | 0.07% குறைவு |
| | | | எம்.எஸ்.ஆர் அன் கோ பி.மான்னார்பாளையம், சேலம் | 3.59 % கூடுதல் |
| 2 | அம்மன் கோவில் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்தல் | 21,30,000/- | கே.எஸ்.மாரியப்பன், 716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.06 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் **5–6/327**, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.94 % கூடுதல் |
| 3 | வெடியரசம்பாளையம் ஆண்டிக்காடு 2வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்தல் | 14,70,000/- | கே.எஸ்.மாரியப்பன், **716**பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.06 % குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் **5–6/327**, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 1.03 % கூடுதல் |
| 4 | ஆண்டிக்காடு 1வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்தல் | 13,30,000/- | கே.எஸ்.மாரியப்பன், **716**பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.06 % குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் **5–6/327**, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 1.08% கூடுதல் |
| 5 | மாதாபுரம் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்தில் முதல் தளம் கட்டும் பணி மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 24,60,000/- | கே.எஸ்.மாரியப்பன், **716**பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.15 % குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் **5–6/327**, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 1.93 % கூடுதல் |
| | **மொத்தம்** | **87,90,000/** | | |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.83/2024/இ1

**தீர்மான எண். 31 நாள். 28.02.2024**

அங்கீகரிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.9</u>**

நகராட்சியில் ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள TN 77 R 6798 புதிய ஈப்பு வாகனம் 30000 கிலோ மீட்டர் மேல் ஓடியுள்ளதால், வாகனம் 3வது சர்வீஸ், வீல் அலைமெண்ட், வீல் பேலன்ஸ், முன்புற விளக்கு பழுது மற்றும் இதர சிறு பழுதுகள் சரிசெய்யப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்க்கு சர்வீஸ் பணிகளை அங்கீகரிக்கப்பட்ட M/s.எஸ்.கே.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட், சேலம் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.35000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.170/2024/இ1

**தீர்மான எண். 32 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் சமயசங்கிலி கிராமத்தில் காவிரி ஆற்றங்கரையோரம் மின்வாரிய கதவணைக்கு மேற்புறம் கட்டுப்பட்டு அங்குள்ள சேமிப்பு கிணற்றில் இருந்து தண்ணீர் உறிஞ்சப்பட்டு அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் வருடந்தோறும் மழைக்காலங்களில் மின்வாரிய கதவணை பராமரிப்பு பணிகளுக்காக மூடப்பட்டு அனைத்து மதகுகளில் உள் கேட் (Gate) களும் தூர்வாரப்படும். இதன் காரணமாக கதவணையின் மேற்புறம் தண்ணீர் தேக்கம் இன்றி நகராட்சிக்கு சொந்தமான சேமிப்பு கிணற்றுக்கு தண்ணீர் வருவது தடைபடும். ஆற்றின் மத்தியில் மட்டுமே தண்ணீர் ஓட்டம் இருப்பதால், அங்கிருந்து 5 நீர்மூழ்கி மின்மோட்டார்களை பயன்படுத்தி சேமிப்பு கிணற்றுக்கு தண்ணீர் கொண்டு வரப்படும். இந்நிலையில், பயன்பாட்டில் இருந்த 5 மோட்டார்களில் ஒரு மோட்டார் பழுதாகி விட்டதால், வரும் மார்ச் மாதத்தில் ஆற்றின் நடுவில் இருந்து சேமிப்பு கிணற்றுக்கு 4 மோட்டார்களை கொண்டு தண்ணீரை கொண்டு வருவதால் சிரமம் உள்ளதால், புதிதாக 10 H.P.திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் ஒன்றை கொள்முதல் செய்து பயன்பாட்டில் வைக்க ஆகும் செலவினம் ரூ.90,000/—ஐ குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.197/2024/இ1

**தீர்மான எண். 33 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 94 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. தற்போது நெடுஞ்சாலைத் துறையினால் உயர்மட்ட மேம்பாலப் பணி நடைபெற்று வருவதால், கட்டுமானப் பணிகளின் போது ஆழ்துளை குழாய் கிணற்றில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு, பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, கூடுதலாக 2 எண்ணிக்கை 7.50 H.P மற்றும் 4 எண்ணிக்கை 5 H.P மின்மோட்டாரினை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து அவ்வப்போது ஏற்படும் பழுதான மின்மோட்டார்களுக்கு மாற்றாக புதியதாக கொள்முதல் செய்யும் மின்மோட்டாரினை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மற்றும் அதற்குண்டான உபகரணங்கள் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துக்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/—ஐ குடிநீர் நீதியில் லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.41/2024/இ1

**தீர்மான எண். 34 நாள். 31.01.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.12**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2021/ நாள். 11.2023 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான முகாம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் கடந்த 19.12.2023, 22.12.2023 மற்றும் 29.12.2023 ஆகிய மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டு, முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, பயனாளிகளுக்கு சம்மந்தப்பட்ட துறைகளின் வாயிலாக மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக ஆணைகள் வழங்கும் பொருட்டு விழா 10.02.2024 அன்று பள்ளிபாளையம் G.V. மஹாலில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொள்ளும் பொதுமக்களுக்கு தேவையான இருக்கை வசதிகள், சாமியான பந்தல், ஒலி அமைப்பு, மற்றும் தண்ணீர் வசதிகள், மண்டபத்திற்கான வாடகை ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.48,000/—ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1998/2023/இ1

**தீர்மான எண். 35 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.13</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2021/ நாள். 11.2023 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான முகாம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் கடந்த 19.12.2023, 22.12.2023 மற்றும் 29.12.2023 ஆகிய மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டு, முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, பயனாளிகளுக்கு சம்மந்தப்பட்ட துறைகளின் வாயிலாக மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக ஆணைகள் வழங்கப்பட்டது. மேற்கண்ட விழாவில் கலந்து கொள்ளும் பொதுமக்களுக்கு தேவையான இருக்கை வசதிகள், சாமியான பந்தல், ஒலி அமைப்பு, மற்றும் தண்ணீர் வசதிகள், மண்டபத்திற்கான வாடகை ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பணிக்கு 09.02.2024ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கே.தனபாலன்,<br>208, கச்சேரி வீதி, ஈரோடு. | ரூ. 47,500/– |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | ரூ. 48,200/– |
| 3 | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | ரூ. 49,000 /– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே.தனபாலன், ஈரோடு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1998/2023/இ1

**தீர்மான எண். 36 நாள். 28.02.2024**

அங்கீகரிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.14</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் சமயசங்கிலி கிராமத்தில் காவிரி ஆற்றங்கரையோரம் மின்வாரிய கதவணைக்கு மேற்புறம் கட்டுப்பட்டு அங்குள்ள சேமிப்பு கிணற்றில் இருந்து தண்ணீர் உறிஞ்சப்பட்டு அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு 60H.P. டர்பைன் மோட்டார் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் இரண்டு மோட்டார்களில், மோட்டார் எண் 1 பயன்பாட்டில் இருந்தபொழுதே நின்று விட்டது. இதனை கழற்றி பரிசோதித்த பொழுது line shift bearing, line shift, oil போன்ற பாகங்கள் பழுதடைந்திருப்பது கண்டறியப்பட்டது. மோட்டார் எண் 2ல் ஏதேனும் பழுது ஏற்பட்டால், இரண்டு மோட்டார்களையும் இயக்க முடியாமல், நகரத்திற்கு குடிநீர் விநியோகிப்பதில் தடை ஏற்படும். எனவே பழுதாகியுள்ள மோட்டார் எண் 1 ஐ பழுது நீக்கி பயன்பாட்டில் கொண்டு வருவது அவசியமாகும். மோட்டார் எண் 1 ன் பழுது சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.1,98,000/–ஐ குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.198/2024/இ1

**தீர்மான எண். 37 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.15</u>

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி 2023–2024ம் ஆண்டிற்கான வருவாய் மூலதா நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதிகளுக்கான வரவு செலவு அறிக்கை மற்றும் இதே நிதி 2024–2025ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2157/2023/இ1

**தீர்மான எண். 38 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.16**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதிக்குட்பட்ட காவிரி ஆற்றங்கரையில் படித்துறைகள் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் ஆற்றில் ஆகாயத்தாமரை செடிகள் அதிகமாக படர்ந்துள்ளதால், படித்துறைகளை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதுடன், ஆற்றில் எந்த நபரும் இறங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. மேலும், ஆகாயத்தாமரையின் வளர்ச்சி காரணமாக விஷ ஜந்துகள், பூச்சிகள் அருகில் உள்ள வீடுகளுக்கு உள்ளேயும் நுழைய வாய்ப்புள்ளது. எனவே, காவிரி ஆற்றங்கரையில் கட்டப்பட்டுள்ள படித்துறைகளில் வளர்ந்துள்ள ஆகாயத் தாமரை செடிகளை அகற்ற ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.199/2024இ1

**தீர்மான எண். 39 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.17**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள்,பதிவேடுகள்,சலான்கள்,ரசீதுகள் மற்றும் கணினி உதிரி பாகங்கள் **2024–2025**ம் ஆண்டிற்கு (ஒரு ஆண்டிற்கு) அலுவலகத்தின் தேவைக்கேற்ப அரசு அங்கீகரிக்கப்பட்ட அல்லது கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.**12.00** இலட்சம் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அலுவலகத்தின் தேவைக்கேற்ப அரசு அங்கீகரிக்கப்பட்ட அல்லது கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து **2024–2025**ம் ஆண்டிற்கு வாங்க மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.195/2024/இ1

**தீர்மான எண். 40 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.18**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/EA-2 நாள்.**29.01.2024** ன் படி, நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்கு 15th CFC 2023-24 மற்றும் 2024-25 Untied Grant ன் நிதியாண்டின் கீழ் ரூ.**72.00** லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 26.02.2024 – ம் தேதி திங்கட் கிழமை அன்று கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எ | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **15வது மத்திய நிதிக்குழு 2023-24 Untied Grant** வார்டு எண் 17 பாரதியார் தெரு 22வது தெரு (052017L040), வார்டு எண் 17 பாரதியார் தெரு 19வது தெரு (052017L037), வார்டு எண் 17 பாரதியார் தெரு 1வது தெரு (052017L028), வார்டு எண் 17 பாரதியார் தெரு மெயின் தெரு (052017L042) ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் | 12,50,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.05% குறைவு |
| | | | கே.எஸ்.மாரியப்பன், 716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.52 % கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | **15வது மத்திய நிதிக்குழு 2024-25 Untied Grant** வார்டு எண் 12 கோவிந்தசெட்டி தெரு (052012L048), வார்டு எண் 12 விநாயகர் தெரு குறுக்கு தெரு–1 (052012S029), வார்டு எண் 12 கன்னிமாரியம்மன் கோவில் வீதி (052012S029), வார்டு எண் 12 ஈ.ஆ. தியேட்டர் சாலை குறுக்கு தெரு (052012S030), வார்டு எண் 12 சுந்தரம் தியேட்டர் சாலை (Zone-A ) (052012L019), வார்டு எண் 17 பாரதியார் தெரு 3 (052017L030), வார்டு எண் 17 பாரதியார் தெரு 2 (052017L029), வார்டு எண் 17 பாரதியார் தெரு 9 (052017S044), வார்டு எண் 17 பாரதியார் தெரு 4 (052017L031), வார்டு எண் 17 பாரதியார் தெரு 7 (052017L033), வார்டு எண் 17 பாரதியார் தெரு 15 (052017S049), வார்டு எண் 17 பாரதியார் தெரு 16 (052017S050) ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.12 % குறைவு |
| | | | கே.எஸ்.மாரியப்பன், 716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.12 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 41 நாள். 28.02.2024**

ஏற்கப்பட்டது

**பொருள் எண்: 19**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3125/2024/EA2 நாள்.23.02.2024 ன்படி நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2024–2025 ஆம் நிதி ஆண்டிற்கா Tied Grant ன் கீழ் ஒரு மினிஎர்த் மூவர் (JCB) வாகனம் கொள்முதல் செய்து கொள்வதற்கு நிர்வாக அனுமதி ரூ.35.20/– லட்சத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.204/2024/இ1

**தீர்மான எண். 42 நாள். 28.02.2024**

பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள் எண்: 20</u>**

பள்ளிபாளையம் நகராட்சியினை ஒட்டியுள்ள அக்ரஹாரம் பஞ்சாயத்து எல்லை முதல் நகராட்சி அலுவலகம் முன்பு வரை உள்ள ஓடை கடந்த பல ஆண்டு காலமாக நகரின் மைய பகுதியில் சென்று வருகிறது. இவ்வோடை எவ்வித பராமரிப்பு இன்றி தூர்வாரப்படாமல் இருப்பதால், மழைக்காலங்களில் ஓடையில் அதிகளவில் தண்ணீர் வரத்து இருக்கும்பொழுது. ஓடை நிரம்பி நகருக்குள் புகுந்து மிகுந்த சேதத்தை விளைவித்து வருகிறது. எனவே, மேற்சொன்ன ஓடை பகுதிகளில் சுமார் 1300 மீட்டர் நீளத்திற்கு ஓடையினை தூர்வாரி இருபுறமும் கான்கிரீட் சுவர் கட்டி, மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படாதவாறு ஓடையினை சீரமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு தனியார் ஆலோசகரை நியமிக்க ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.216/2024/இ1

**தீர்மான எண். 43 நாள். 28.02.2024**

அனுமதிக்கப்பட்டது

**(ஒம்) மோ.செல்வராஜ்,**
**தலைவர்,**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**